08.02.2023 -

OS.113/2020

வா.சா.1 முகம்மது உறசனுதீன், த/பெ. முகம்மது யாசின்

குறுக்கு விசாரணை

முகம்மது யாசினுக்கும் அசினாபீவிக்கும் பிறந்த மகன் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பிறப்பு சான்றிதழ் 14, பட்டமங்கல புதுத்தெருவில் பதியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். முகம்து யாசினுக்கும் அசினா பீவிக்கும் 14, பட்டமங்கல புதுத்தெருவில் வீடு ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பிறப்பு சான்றிதழில் பிறப்பை யார் தெரிவித்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சுகப்பிரசவமாக பிறந்தேனா அல்லது மருத்துவச்சி உதவியுடன் பிறந்தேனா என்று எனது தாயார் என்னிடம் கூறியுள்ளாரா என்றால் இல்லை. பட்டமங்கல புதுத்தெருவில் முகம்மதியர் ஒருவர் மட்டுமே உள்ளார் என்றால் நான் பட்டமங்கலம் புதுத்தெருவில் பிறந்ததாக பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 14, பட்டமங்கல புதுத்தெரு என்ற விலாசத்தில் வீடே இல்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. எனது தந்தையான முகம்மது யாசின் தான் நான் பிறந்த தகவலை பதிவுத்துறையில் தெரிவித்தார். எனக்கு வேண்டிய நபர்களை வைத்து வா.சா.ஆ.1 பிறப்பு பதிவேடு பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நகராட்சியால் வழங்கப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தனிநபர் கொடுத்த விவரத்தில் பதியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தகவல் கொடுத்த தேதி இல்லை என்பதால் வா.சா.ஆ.1 மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. முகம்மது யாசின் எப்போது காலமானார் என்றால் சுமார் 4 வருடமிருக்கும். தாவா 1 ஆம் அயிட்ட சொத்திற்கு பட்டா மாற்றம் செய்ய நான் தான் மனு கொடுத்தேன் என்றால் இல்லை. யார் மனு கொடுத்து பட்டாமாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்புகொடுத்த பின்னிட்டு நான் தான் 05.03.2020 ல் பட்டாமாற்றம் செய்ய மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. முகம்மது யாசின் 08.01.2019 ல் இறந்துவிட்டதாக நான் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு உயிருடன் இருப்பது நானும், மலிக்நிஷாவும் மட்டும் தான் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. சுதா (எ) முத்துலெட்சுமியை தான் திருமணம் செய்துள்ளேன். நெடுங்காடு என்ற ஊரிலுள்ள வித்யாஸ்ரீ பாடசாலையில் அவர் ஆசிரியராக உள்ளார் என்றால் சரிதான். முகம்மது யாசின் பிரதிவாதியை திருமணம் செய்யும் போது எனக்கு சுமார் 15 வயதிருக்கும் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது)

ஓம்/ச. சரண்யா

சார்பு நீதிபதி,

திருவாரூர்